DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.03/2025 |
| Deposition of witness | : | P.W. 3 |
| Name | : | வெங்கடாஜலபதி |
| Father's /Husband Name | : | நரசையன் |
| Village | : | அட்டமங்கலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 58 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day of May 2025.
A1, A2 Present. A3 produced from Judicial custody.

**முதல் விசாரணை:-**

நான் அட்டமங்கலம் குடியானத் தெருவில் வசித்து வருகிறேன். எனது மகள் யோகப்பிரியாவை விழுப்புரத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். தற்போது எனது மகள் திருச்சியில் வசித்து வருகிறார். கடந்த 17.09.2023 ம் வருடம் அட்டமங்கலம் குடியானத்தெருவில் எங்களது வீட்டை பூட்டிவிட்டு திருச்சியில் உள்ள எனது மகள் யோகப்பிரியாவை பார்ப்பதற்காக நானும் எனது மனைவி மற்றும் மகனுடன் சென்றிருந்தேன். 24 ம் தேதியன்று எனது வீட்டை எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் மணிமாலா என்பவர் போன்மூலம் எனது வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதாக கூறினார். நானும் எனது மனைவியும் உடனே ஊருக்கு வந்து வீட்டின் கதவை திறந்து பின்பக்க கதவை பார்த்த போது உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. வீட்டில் பீரோவில் இருந்த துணிமணிகள் கலைக்கப்பட்டு கிடந்தது. வீட்டில் பொருள் எதுவும் காணாமல் போகவில்லை. இது சம்மந்தமாக எனது மனைவி குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.05.06 03:27:30 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal